பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி

# புதுச்சேரியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர் டி.இராமச்சந்திரன்!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, டிச.9**

**“பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி புதுச்சேரியின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டவர் டி.இராமச்சந்திரன் அவர்கள்” என்று அவரது மறைவு குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.**

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:-



புதுச்சேரியின் முன்னாள் முதலமைச்சரும், புதுவை மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னாள் அமைப்பாளருமாகிய டி. ராமச்சந்திரன் அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகுந்த துயருற்றேன். அவரது மறைவிற்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கழகத்தின் சார்பில் முதலமைச்சராக இருந்து, புதுச்சேரியின் வளர்ச்சிக்காகப் பல்வேறு நலத்திட்டங்களைச் செயல்படுத்திச் சாதனை படைத்தவர்.

அவரது மறைவால் வாடும் அவரது குடும்பத்தினர் மற்றும் புதுச்சேரி மக்கள் அனைவருக்கும் எனது ஆறுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.





காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 47வது பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் எல்.பிரபு ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் கருத்தரங்கத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், கழக மாணவர் அணி தலைவர் ராஜீவ்காந்தி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர்கள். அருகில் சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர்.ராஜா, மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், பகுதிச் செயலாளர் வே.கருணாநிதி உள்ளனர்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலையில் – மேயர் பிரியா தலைமையில் ‘மனிதநேய உதயநாள்’!

# மருத்துவ முகாம் - பெண்களுக்கான முழு பரிசோதனை!

## 500 தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவி வழங்கல்!

## அமைச்சர் கே.என்.நேரு – அப்பல்லோ ப்ரீத்தா ரெட்டி இன்று துவக்கி வைக்கின்றனர்!

சென்னை, டிச. 9 -

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில் மனிதநேய உதயநாளை முன்னிட்டு உதயம்12,பெண்ணின்றி ஏது உலகம்! முன்னின்று காக்கும் உதயம்!எனும் தலைப்பில் பெண்களுக்கான சிறப்பு மருத்துவ முகாம் இன்று (9.12.2024 திங்கள்கிழமை) காலை 8 மணியளவில், சென்னை, மங்களபுரம், சந்திரயோகி சமாதி சாலை, குடிசை மாற்று வாரிய குடியிருப்பில் நடைபெறுகிறது.

இம்மாபெரும் மருத்துவ முகாமில்,சென்னை பெருநகர மாநகராட்சி மேயர் பிரியா ராஜன்தலைமை வகிக்கிறார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, சரிதா மகேஷ்குமார் முன்னிலை வகிக்கின்றனர். பெரம்பூர் ஆர்.ராஜன், எஸ். புஷ்பராஜ் வரவேற்கின்றனர்.

இம்மருத்துவமுகாமை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு மற்றும் மேலாண்மை இயக்குநர், அப்பல்லோ மருத்துவமனை மருத்துவர். ப்ரீத்தா ரெட்டி ஆகியோர் பெண்களுக்கான சிறப்பு மருத்துவ முகாமை துவக்கி வைக்கின்றனர்.

மேலும், மருத்துவ முகாமில், டாக்டர். கலாநிதிவீராசாமி எம்.பி, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, அ. வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், கே.எஸ். இரவிச்சந்திரன், என். கிருஷ்ணமூர்த்தி, சங்கரிநாராயணன், தமிழன்பிரசன்னா, பி.கே.மூர்த்தி, கே. சந்துரு, சி.மகேஷ்குமார், எஸ்.மணிமுடி, பரிதிஇளம்சுருதி, எம்.விஜயகுமார், என். பி.எம்.ஷேக்அப்துல்லா, வே.உமாகாந்த், கோ. ஏகப்பன், தேவஜவகர், ஜி.எம். தேவன், புலவர் சாமிநாகப்பன், ICF வ.முரளிதரன், ஏ. நாகராசன் எம்.சி, கூ.பி. ஜெயின் எம்.சி, வே.வாசு, எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, டி.எஸ்.பி.ராஜகோபால் எம்.சி, எம்.டி.ஆர்.நாகராஜ், சொ.வேலு எம்.சி, வி.சுதாகர், ஸ்ரீராமுலு எம்.சி. பி.உதயசங்கர், பி.ஜே.துளசிங்கம், டி.வி.செம்மொழி, சாவித்திரி வீரராகவன், ரமேஷ்(எ) நீலகண்டன், எஸ்.பன்னீர்செல்வம், கோ.மணி, எம்.இப்ராஹிம் கனி, ஆ.நிர்மலா தேவி, டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா, இரா.கலைச்செல்வி, டி. லோகேஷ், ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், எஸ்.தனசேகர், ஜி.ஜே.பிரபு, க. வினோத்கு மார், ஆர்.டி. சங்கர்நானா. மாவட்ட அமைப்பாளர்கள்: வானவில் விஜய், ந.துலுக்காணம், எம்.பெரோஸ்கான், புரசை ஜி.தாமோதரன், எல்.பி.எப். மோகன், பி.விஜயகுமார், எம்.விநாயகம், சுதாதீன தயாளன், ராஜேஸ்வரிஸ்ரீதர், துரைகண்ணன், டாக்டர்.ஜி.சாந்தகுமார், ஜி. வி.நாகவள்ளி, க.பா. பிரதீப்குமார், எல்.சம்பத்குமார், கு.கிருஷ்ணமூர்த்தி, ம.அசோக்குமார், கா.ராஜ் முகமது, து.ஆயிரம், இரா. வீரமணி. மாமன்ற உறுப்பினர்கள்: புனிதவதி எத்திராசன், வழக்கறிஞர் மு.சரவணன், ரமணி லோகேஷ், தமிழ்செல்வி, சசிகுமார். திரு.வி.க.நகர் வடக்க தெற்கு பகுதி வட்ட கழக செய லாளர்கள்: மா.ருத்ரமூர்த்தி, பரிமளாசுரேஷ் பாபு, எம்.ஏ.டீக்கா, எம். இசட்.அபோய், எஸ்.சசிகுமார், எம்.தமீம், பொல்லு D.சுரேஷ்குமார், வி.கே. வெங்கடேசன், எஸ்.வெங்கடேசன் ஆகியோர் சிறப்பிக்கின்றனர்.

வட்ட கழக செயலாளர் ஜி.கிருஷ்ணகுமார் நன்றி கூறுகிறார்.

‘சட்டக் கதிர்’ ஆசிரியர் வழக்கறிஞர்

# வி.ஆர்.எஸ். சம்பத் மருத்துவமனையிலிருந்து இல்லம் திரும்பினார்!

## கழக முன்னணியினர் நலம் விசாரித்தனர்!

சென்னை, டிச.9-

வழக்கறிஞரும், சென்னை வளர்ச்சிக் கழகத்தின் தலைவரும், சட்டக்கதிர் ஆசிரியருமான டாக்டர் வி.ஆர்.எஸ். சம்பத் அவர்கள் தனியார் மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டு நலமுடன் வீடு திரும்பினார்.

சமீபத்தில் மலேசியா நாட்டில் கோலாலம்பூரில் பதினோராவது உலகத் தமிழர் பொருளாதார மாநாட்டினை மிகச் சிறப்பாக நடத்தி விட்டுச் சென்னை திரும்பிய வி.ஆர்.எஸ் சம்பத் அவர்கள் வேறு ஒரு நிகழ்வில் கலந்து கொள்வதற்காக நவம்பர் 30 அன்று துபாய் பயணம் மேற்கொள்வதற்காக சென்னை விமான நிலையம் சென்றார். கனமழை காரணமாக விமானம் காலதாமதம் ஆனதால் அன்று இரவு சென்னை ஐ.சி.டி. கிரான்ட் சோழா ஓட்டலில் தங்கினார்.

நவம்பர் 30 அதிகாலை விமானப் பயணம் தயாராகிட சென்றபோது வழுக்கி விழுந்து வலது கையில் எலும்பு முறிவு ஏற்பட்டது. உடனடியாக ஐ.சி.டி. சோழா ஹோட்டல் நிர்வாகத்தினர் அவரை மியாட் மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பிரிவில் சேர்த்தனர். கடந்த ஒரு வாரமாக மருத்துவமனையில் அறுவை சிகிச்சை பெற்று வந்த வி.ஆர்.எஸ்.சம்பத் சிகிச்சை முடிந்து நலமுடன் இல்லம் திரும்பினார்.

அமெரிக்கா, இங்கிலாந்து ஆஸ்திரேலியா, கனடா, மலேசியா, சிங்கப்பூர், ஜப்பான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளில் உள்ள தமிழ் சங்க பிரதிநிதிகளும், கழக முன்னணியினரும், உயர் அதிகாரிகளும், வி.ஆர்.எஸ். சம்பத் அவர்களின் உடல் நலம் குறித்து தொலைபேசி வழியாகவும் நேரிலும் விசாரித்தனர்.

சோழிங்கநல்லூர் மேற்கு 185–வது வட்டச் செயலாளர் ஜெ.திவாகர் ஏற்பாட்டில்

# உள்ளகரத்தில் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா - நல உதவிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் - ச.அரவிந்த் ரமேஷ் - எஸ்.வி.ரவிச்சந்திரன் வழங்குகின்றனர்!

சென்னை, டிச. 9 -

தமிழ்நாடு துணை முதலமைச்சர் . உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு சென்னை தெற்கு மாவட்டம் சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி உள்ளகரம் 185 வது வட்டத்தில் வட்ட கழக செயலாளர் உள்ளகரம் ஜெ.திவாகர் தலைமையில் உள்ளகரம் வெங்கட் நாராயணா தெருவில் இன்று (09.12.2024) மாலை 5 மணியளவில் நடைபெறுகிறது.

இந்நிகழ்ச்சியில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், தென் சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச.அரவிந்த் ரமேஷ், தொகுதி பொறுப்பாளர் நா. சந்திரபாபு, தலைமை கழக பேச்சாளர்கள் தஞ்சை கூத்தரசன், , இரா.கனிமொழி ஆகியோர் சிறப்புரையாற்று கின்றனர்.

சோழிங்கநல்லூர் மேற்கு பகுதி செயலாளர் மண்டலக் குழுத்தலைவர் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன் முன்னிலை வகிக்கிறார். 185வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி.சர்மிளாதேவி திவாகர் வரவேற்புரையாற்றுகிறார்.

நிக்கழ்ச்சியில் மாவட்ட பிரதிநிதிகள், பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், அணிகளின் மாவட்ட, பகுதி, வட்ட அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொள்கின்றனர். இறுதியாக வட்ட கழக துணை செயலாளர் ஆர்.அன்புரோஸ் நன்றியுரையாற்றுகிறார்.

இந்தியாவிலேயே குறைந்த விலையில்

# மின்சாரம் வழங்குவது தமிழ்நாட்டில்தான்!

## அமைச்சர் வி.செந்தில்பாலாஜி பேட்டி !

கரூர், டிச. 9 -

இந்தியாவிலேயே குறைந்த விலையில் மின்சாரம் வழங்குவது தமிழ்நாட்டில் தான் என அமைச்சர் வி .செந்தில் பாலாஜி கூறினார்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலுக்கு இணங்க கரூர் மற்றும் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற தொகுதி பொது மக்களை சந்தித்து கோரிக்கை மனுக்களை வெறும் நிகழ்ச்சி நடைபெற்றது. கரூர் மாநகராட்சி கரூர் மேற்கு பகுதி தெற்கு பகுதி வார்டுகளில் பொதுமக்களிடம் மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் வி. செந்தில் பாலாஜி கோரிக்கை மனுக்களை பெற்றார். கரூர் கோடங்கிபட்டி பட்டாளம்மன் கோவில் அருகே நடைபெற்ற நிகழ்ச்சிக்கு கரூர் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் தலைமை வகித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் குளித்தலை ஆர். மாணிக்கம், க. சிவகாமசுந்தரி, ஆர். இளங்கோ, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணைமேயர் தாரணி சரவணன், மண்டல குழு தலைவர் எஸ்.பி. கனகராஜ், கரூர் மாவட்ட எஸ்.பி. பெரோஸ்கான் அப்துல்லா, மாநகராட்சி ஆணையர் சுதா, முன்னிலை வகித்தனர்.

பின்னர் அமைச்சர் வி. செந்தில் பாலாஜி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அவர் கூறியதாவது:-

தமிழ்நாடு அரசு மின்சார கொள்முதல் மத்திய மின் அமைப்புடன்தான் ஒப்பந்தம் போட் டது. எந்த தனியார் அமைப்புடனும் ஒப்பந்தம் போடவில்லை. கடந்த அ.தி.மு.க. ஆட்சியில் நிர்வாக ரீதியாகவும், நிதிநிலைமை ரீதியாகவும் முற்றிலும் சீர்குலைந் திருந்த தமிழ்நாடு மின்சார வாரியத்தை அடுத்தடுத்த நிர்வாகச் சீர்திருத்த மற்றும் ஆக்கபூர்வமான நடவடிக்கை மூலம், இன்றைக்குத் தமிழ்நாடு மின்சார வாரியத்தைத் தலைநிமிர வைத்துள்ளவர் முதலமைச்சர் அவர்கள்.



அதைப் பொறுத்துக் கொள்ள முடியாமல் இப்படி அடிப்படை உண்மை கிஞ்சித்தும் இல்லாத பொய்க் குற்றச்சாட்டுகளை எதையாவது சொல்ல வேண்டும் விமர்சிக்க வேண்டும் களங்கம் ஏற்படுத்த வேண்டும் என்கிற நோக்கத்தில் தொடர்ந்து பூதக்கண்ணாடி போட்டு அவதூறு பரப்பி வருகின்றனர்.

அவையெல்லாம் தோல்வி அடைந்து வருவதால் விரக்தியில் இது போன்ற மோசமான வார்த்தைகளை பயன்படுத்தி அறிக்கைகளை விடுகின்றனர். சரியான கருத்தாக இருந்தால் இந்த அரசு அதுபற்றி பரிசீலிக்கும் . அதில் எந்த மாற்றமும் இல்லை.

இன்னும் சொல்லப் போனால், ஒன்றிய அரசின் புதுப்பிக்கத்தக்க மின்சா ரத்தைப் பெறுவது குறித்த கட்டாய விதி எதுவும் இல்லாத காலகட்டத்தில் அதிமுக ஆட்சியில் அதானி லிமிடெட் நிறுவனம், தங்களுக்கு சொந்தமான ஐந்து நிறுவனங்கள் மூலமாக, 648 மெகாவாட் திறன் கொண்ட சூரிய சக்தியை உற்பத்தி செய்வதற்கான எரிசக்தி கொள்முதல் ஒப்பந்தத்தில் 04/07/2015 ல் கையெழுத்திட்டது. இந்த ஒப்பந்தத்தின்படி, ஒரு யூனிட்டுக்கு ரூ.7.01 என முடிவு செய்து, 31/03/2016க்கு முன் உற்பத்தி ஆலைகள் இயக்கப்பட வேண்டும் எனவும் தீர்மானிக்கப்படுகிறது. அதானி நிறுவனம் 31/03/2016க்கு முன் பல்வேறு தேதிகளில் 313 மெகாவாட் மின்சா ரத்தை இயக்கி, ஒப்பந்தப்படி ஒரு யூனிட்டுக்கு ரூ.7.01 உரிமை கோரியது.. 31.03.2016 தேதிக்குப் பிறகு, அதாவது கிட்டத்தட்ட 6 மாதங்கள் கழித்து, 18.09.2016 அன்று 288 மெகாவாட் மின்சாரம் வழங்கியது.

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் 2022ல், சிவில் மேல் முறையீட்டு முறையில் இந்திய உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.. மின் சாரத்திற்கான மேல் முறையீட்டு ஆணையத்தின் இந்த உத்தரவுக்கு இடைக்காலத் தடை விதிக்க கோரியது. 17/02/2023 அன்று, உச்சநீதிமன்றம் தடை விதிக்க மறுத்தது. அதன் காரணமாகவே தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம் ரூ.568 கோடி செலுத்தியது.

அந்த பணம் செலுத்த உச்ச நீதிமன்றம் தடை கிடைக்காத காரணத்தால் அந்த மின்சாரம் பெற்றதற்கான தொகை விடு விக்கப் பட்டது.

ஏதாவது திமுக மீது புகார் கூறவேண்டும் என்பதற்காக பூதக் கண்ணாடி போட்டு எதிர்க் கட்சிகள் பொய்யான அறிக்கைகளை வெளியிடுகின்றன. விமர்சனங்களை கண்டு திமுக ஒரு போதும் அஞ்சாது. அது பற்றி சிந்திப்பதும் கிடையாது. இந்தியாவிலேயே மிகக் குறைந்த விலையில் மின்சார வினியோகம் செய்வது, அதாவது ரூ. 2.61என்ற குறைந்த விலையில் வழங்குவது தமிழ்நாடு அரசு மட்டும்தான்.

தரம் குறைந்த வார்த்தைகளில் என்னை குறித்து ஜாமீன் அமைச்சர் என்று ஒருவர் குறிப்பிட்டதை பற்றி கேட்கிறீர்கள் பாஜகவில் எத்தனை பேர் ஜாமீனில் வந்துள்ளனர். எத்தனைபேர் சிறைக்கு சென்று அமைச்சர்களாக உள்ளனர். என்று தெரியுமா?. அவர்கள் எல்லாம் ஜாமீன் அமைச்சர்களா?. ஒரு கருத்தை தெளிவாக சொல்வதற்கான பக்குவமும் இல்லை அறிவும் இல்லை.

லண்டனுக்கு படிக்கச் சென்றது 11 பேர். அதில் ஒருவரை மட்டும் பெரிது படுத்துகிறீர்கள். 11 நபர்கள் இந்த பயிற்சிக்காக சென்றார்கள். மூன்று ஐஏஎஸ் அதிகாரிகள், 3 ஐபிஎஸ் அதிகாரிகள் சென்றனர். ஒருவரை மட்டும் பெரிது படுத்துவது ஏன்? . இந்த படிப்பினால் ஏதோ பெரிய மாற்றம் வந்துவிட்டது போல செய்திகளை வெளியிடுகின்றனர்.

இவ்வாறு அமைச்சர் செந்தில் பாலாஜி கூறினார்.



மதுரவாயல் தெற்குப் பகுதி 150வது வட்டத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் உதயநாளை முன்னிட்டு துண்டலம் அண்ணா நகர் பகுதியில் 500 பேருக்கு அறுசுவை உணவினை சுற்றுச் சூழல் அணி பகுதி அமைப்பாளர் எஸ்.சண்முகசுந்தரம் ஏற்பாட்டில் நேற்று பகுதிச் செயலாளர், காரம்பாக்கம் க. கணபதி எம்.எல்.ஏ., 150வது வார்டு மாமன்ற உறுப்பினர் திருமதி ஹேமலதா கணபதி, ஆகியோர் பொது மக்களுக்கு வழங்கினர். உடன் வட்டச் செயலாளர் சி.சுந்தர், மாவட்ட பிரதிநிதி இரா.ராஜேந்திரன், வட்ட கழக நிர்வாகிகள் எல்.அருள், ஆர்.எஸ்.தில்லைவாணன், இரா.ரமேஷ், வி.ஜெகன்நாதன், டி. பாலாஜி, அ. கவுஸ்பாஷா, க.நரேன்கணபதி, நா.அப்துல்கபூர், ஏ.ஆனந்த், மற்றும் பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் கலந்துகொண்டனர்.

# கலைஞரின் ‘வரும் முன் காப்போம்’ திட்ட மருத்துவ முகாம்!

## பல்லாவரம் இ. கருணாநிதி எம் எல்.ஏ. துவக்கி வைத்தார்!

சென்னை,டிச.9-

பல்லாவரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொழிச்சலூர் ஊராட்சியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை சார்பில் கலைஞரின் வருமுன் காப்போம் திட்ட மருத்துவ முகாம் 7-12-2024 அன்று பொழிச்சலூர் மரிய நிவாஸ் பள்ளியில் நடைபெற்றது.

இதில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி கலந்துகொண்டு மருத்துவ முகாமை துவக்கி வைத்து ஏராளமான தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பொருட்கள் அடங்கிய பெட்டகங்களை வழங்கினார்.

முகாமில் அல்ட்ரா சவுண்ட் ஸ்கேன், இசிஜி பரிசோதனை, ஆரம்பகால புற்றுநோய் கண்டுபிடிப்பு, மகளிருக்கான சிறப்பு சிகிச்சை, சிறுநீரில் சர்க்கரை, உப்பு பரிசோதனை, ரத்தத்தில் சர்க்கரை, கொழுப்பின் அளவு பரிசோதனை, ரத்த வகைப்படுத்தல் சோதனை, செமி ஆட்டோ அனலைசர் மூலம் சிறப்பு பரிசோதனை, இருதய நோய், சிறு நீரக நோய், எலும்பு, காது, மூக்கு, தொண்டை பிரிவு, பெண்கள் சிறப்பு பிரிவு, கண் மருந்துவம், குழந்தை நல சிறப்பு பிரிவு, தோல் நோய் பிரிவு, புற்று நோய் பிரிவு, சித்த மருத்துவம் என பல்வேறு பரிசோதனைகள் செய்ய முகாமில் 1000 க்கு மேற்பட்டோருக்கு செய்யப்பட்டன.

இம்முகாமில் முதல்வரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட பயனானிகள் உரிய அறுவை சிகிச்சைக்கும், உரிய மருத்துவமனைக்கும் பரிந்துரைக்கப்பட்டன

இந்த மருத்துவ முகாமில் பரிசோதனை, சிகிச்சை அனைத்தும் இலவசமாக செய்யப்பட்டது. இந்நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர் வனஜா தயாளன் துணைத் தலைவர் ஜோசப் ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் அரசு மருத்துவர்கள் செவிலியர்கள் நல்வாழ்வு சங்க நிர்வாகிகள் சமூக ஆர்வலர்கள் ஆகியோர் உடன் இருந்தனர்.



சென்னை மேற்கு மாவட்ட திமுக, ஆயிரம் விளக்கு கிழக்கு பகுதி, 117வது வட்டத்தில் துணை முதல்வர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு வட்டச் செயலாளர் எஸ்.சத்தியப் பெருமாள் தலைமையில் பொதுக்கூட்டத்தில் நல உதவிகளை மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு வழங்கினார். உடன் கழக இணை அமைப்பு செயலாளர் அன்பகம் கலை, மருத்துவர் நா.எழிலன் எம்.எல்.ஏ, பகுதி செயலாளர் மா.பா.அன்புதுரை, தலைமைக் கழக பேச்சாளர் தூத்துக்குடி சரத்பாலா, ரிஷி சந்தோஷ், மாவட்ட துணைச் செயலாளர் வி.எஸ்.கலை, தலைமை செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், திருமலை பொன்னுரங்கம் எம்.சி., மாவட்ட அமைப்பாளர்கள் துபாய் வி.ஆர். விஜய், மு செந்தில் குமார், மற்றும் பகுதி – வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னணியினர் கலந்து கொண்னடர்.